உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No. 689/2023

பெயர் : அழகு(அ.சா.7)

தகப்பனார் பெயர் :பெரியகருப்பன்

கணவர் பெயர் :

வயது :51

கிராமம் :அலங்கம்பட்டி

வட்டம் :மேலூர்

தொழில் :கூலிவேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

01.08.2025

முதல் விசாரணை:

அலங்கம்பட்டியை சேர்ந்த செல்மணி, காத்தம்மாள் மீனாட்சி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

அ.சா.1 செல்மணியின் 2வது மனைவியான மீனாட்சி தற்கொலை செய்து கொண்டார் இதுதொடர்பாக செல்வமணிக்கும், மீனாட்சியின் சகோதரர்களும் இடையே கடந்த 03.06.2022 அன்று காலை சுமார் 6.45 மணியளவில் இறந்தது தொடர்பாக காலை 10.00மணியளவில் தகராறு நடந்துள்ளதை நேரடியாக பார்த்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. செல்வமணியை ஆஜர் எதிரிகள் அடித்து கத்தியால் குத்திய விபரம் நன்கு தெரியும் என்றும்

எதிரிகள் உள்ளூர்காரர்கள் என்பதால் ஆஜர் எதிரிகளுடன் சமரசம் ஆகிகொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி : இல்லை

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.01 19:44:01 +0530

Assistant Sessions Judge

Melur